**Friday Sermon**/ வெள்ளிக்கிழமை குத்து.:.பா

*(30 June 2017 / 05 Shawwal 1438 Hijira)*

# *BE FOR ALLAH*

## *அல்லாஹ்வுக்காக வாழுங்கள்*



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவ்வுஸும் அல்.:.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.:.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

**அல்ஹம்துலில்லாஹ்!** அல்லாஹ்வின் அருட்களால் நாம் ரமலானில் நம் வாழ்க்கையினை மிக நல்ல நிலையில் வினியோகித்தோம். ரமலான் மாதத்தில் நாம் புரிந்த நற்செயல்களையாவும் தொடர்ந்து வரும் 11 மாதங்களிலும் நாம் அவ்வாறே புரிந்திட வேண்டும். இன்ஷா அல்லாஹ்! ரமலான் மாதத்தில் நாம் புரிந்த நற்செயல்களை, தொடர்ந்து வரும் மாதங்களிலும் அவ்வாறே புரிந்துகொள்வதில் நாம் வெற்றியடைந்தால் அதற்காக அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ் என கூற வேண்டியதாகயிருக்கும். ரமலான் மாதம் நமக்கு ஏராளமான ஆன்மீக அருட்களையும், பௌதீக நன்மைகளையும் வரவழைத்திருக்கின்றது. இந்த நன்மைகள் நம் பௌதீகமான உடலையும் ஆன்மாவையும் தொட்டிருக்கின்றது. இறை கட்டளைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவை நமக்கு உதவியளித்திருக்கின்றது. கடினமான உழைப்பு மூலமும் ஆழமான முயற்ச்சிகள் மூலமும் அதை நமக்கு அடைய முடிந்தது. பலவீனங்கள் நமக்கு பலதிருந்தும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு உகுந்த முறையில் செயல்பட, நாம் அல்லாஹ்விடம் உதவிக்காக மன்றாடிக் கொண்டதோடு அவன் கட்டளைகளுக்கு ஏற்றவாறு செயல்பட முயற்ச்சித்திருந்தோம் என்பதும் உண்மையாகும்.

அத்தகையான ஒரு மாதத்தில் இத்தகையில் உங்களுக்கு கடினமான முயற்ச்சிகளை மேற்கொள்ள முடிந்து விட்டது என்பது உண்மையாகயிருந்தால் அல்லாஹ்வின் உதவியால் தொடர்ந்தும் இத்தகை முயற்ச்சிகளை மேற்கொள்ள உங்களுக்கு முடிந்துவிடும். நீங்கள் இவ்வாறு செயல்பட்டது அல்லாஹ்விடமிருந்துள்ள அன்பை அடைந்துக் கொள்ளவும் அவனிடமிருந்து பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ளவுமாகும். அவ்வாறு செயலாற்றியதற்கு நற்கூலியாக உங்களுக்கு அல்லாஹ்வைதான் கிடைத்துவிடும். ரமலான் நம்மை விட்டு சென்றிருக்கின்றது. (மௌரீஷியஸிலானாலும் சரி, உலகின் மற்று பகுதிகளிலானாலும் சரி ) 29 அல்லது 30 நாள்களின் ஆன்மீக பயிர்ச்சிக்குபின் அது வாயிலாக நாம் பெற்ற ஆன்மீக உயிரைக் கொண்டு வருகின்ற 11 மாதமும் வாழ்ந்துக் கொள்ளவும் மேலும் சிறப்பான நற்செயல்கள் புரிந்துக் கொள்ளவும் வேண்டும். இந்த ரமலானில் நாம் பெற்ற அந்த ஆன்மீக உயிர், ஒரு ஆற்றல் வாய்ந்த பாதையாக நமக்கு வழிகாட்டிட வேண்டும். (மேலும் வருகை தரும் ரமலான் வரையில்). நீங்கள் எச்சரிக்கையுடன் இருக்கவில்லையென்றால், பெற்றுக் கொண்ட அனைத்து அருட்களை மட்டுமின்றி அல்லாஹ்வைக் கூட நீங்கள் இழந்து விடலாம். ஒருமுறை சாத்தான் உங்களின் நெருங்கிய நண்பராகயிருந்தது போன்று, மேலும் உங்களுக்கு அச்சூழ்நிலை உருவாகி விடலாம். அப்படியானால் ரமலானைக் கொண்டு நமக்கு கிடைத்த கூலி என்ன? ரமலான் மாதத்தில் நாம் ஏராளமான தியாகங்கள் செய்தோம். ஆனால் ரமலான் சென்று விட்ட போது நாம் புரிந்த நற்செயல்கள் யாவும் ரமலானுடன் போய் மறைந்து விட்டதா? முந்தயது போன்று அனுதின வாழ்கையின் பால் நாம் திரும்பச் செல்கின்றோமா? இவ்வாறு நீங்கள் முன் சென்றால் ரமலானில் நீங்கள் நோன்பு நோற்றதும், ஆர்வமுடன் அல்லாஹ்வின்

திருப்திக்காகவும், அவனை அடைவதற்காகவும் நீங்கள் மேற்கொண்ட உழைப்புகள்யாவும் வீணாகிவிட்டது. திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறியிருப்பது போன்று "உங்களின் இச்செயல்கள் உங்களை இழப்பின்பாலே கொண்டு சென்றது. ரமலான் உங்களுக்கு எந்த பலனையும் வழங்கவில்லையென்றால், பதிலாக அல்லாஹ்வின் கோபத்தை நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் என பொருள். ஏனெனில் நீங்கள் மண்ணுலக கவர்ச்சிகளில் மூழ்கியது மூலம் நற்செயல்களிலிருந்து வெகு தூரம் விலகி சென்றீர்கள். உங்களின் அப்பயணம் இறை தண்டனைக்கு ஆளாகிக் கொள்ளும் பாதையிலாகயிருந்தது. வேறொருவார்த்தையால் கூறினால் சாத்தானுக்கு எதிரான ஜிஹாதில் (தூய போரில்) நீங்கள் வெற்றியடையவில்லை. சாத்தானை எதிர்த்துக் கொள்ளவே கீழ்படுத்திக் கொள்ளவே உங்களுக்கு முடியவில்லை. மட்டுமின்றி அவனை இஸ்லாமாக மாற்றிக் கொள்ளவும் நேர்மையான ஒரு முஸ்லீம் நம்பிக்கையாளராக அவனை பரிணமிக்கச் செய்யவும் உங்களுக்கு முடியவில்லை.

ரமலான் சென்றடைந்தப் பிறகும் நம்மிடம் (முஸ்லீம்களிடம்) குடி கொண்டிருந்த தீமைகளை அகற்றிக் கொள்ள முடியவில்லை என்றால் ரமலானில் எந்த பலனும் நாம் பெறவில்லை என பொருள். ஆகவே நீங்கள் (ரமலானுக்கு பிறகு ஆன்மீக அருட்களை இழந்தவர்கள்) அல்லாஹ்விடமிருந்து ரமலான் வழியாக நீங்கள் ஒருமுறை பெற்ற விலைவாய்ந்த நற்கூலியை இழந்திருக்கின்றீர்கள்.

ஒரு களங்கமற்ற நம்பிக்கையாளர், அதாவது அல்லாஹ்வை மிக அதிகமாக நேசிக்கும் ஒரு நம்பிக்கையாளர் அவர் புரியும் ஒவ்வொரு நன்மைக்கும் இறை சட்டப்படி அவனிடம் அல்லது அவளிடம் வாக்களிக்கப்பட்டிருக்கும் ஓர் நற்கூலி உண்டு என்பதை நாம் உணர வேண்டும். அந்த நற்கூலி என்பது ஒரு சாதாரணமான நற்கூலியல்ல என்பதை நாம் அறிந்துக் கொள்ள வேண்டும். அதற்கு நற்கூலி வழங்கிக் கொள்பவரே அதன் மதிப்பை நிச்சயித்துக் கொள்வதும். ஒரு சாதாரண மனிதர் வழங்கும் பரிசுக்கும் ஒரு அரசர் வழங்கும் பரிசுக்கும் ஒன்றுக்கொன்று மிகப்பெரிய வித்தியாசமிருக்கும். இங்கு அதை வெளிப்படுத்திக் கொள்ள தேவையில்லை. காரணம் அதைக்குறித்து நமக்கு நன்கு தெரியும்.

**அல்லாஹ்விடமிருந்துள்ள நற்கூலி அதாவது எல்லாம் வல்ல சிருஷ்டிகர்த்தாவிலிருந்துள்ள நற்கூலியை விட மேலான நற்கூலியை வழங்கிக் கொள்ள மற்றெவருக்கும் முடிவதில்லை. அந்த நற்கூலிக்கு மதிப்பை அளவிட முடியாது. அதற்கு ஒப்புமையுமில்லை. ஒரு போதும் முடிவில்லாத அத்தகை நற்கூலியின் மதிப்பை அளந்து திட்டப்படுத்துவதற்கான ஏதேனும் அளவுகோல் இருக்கின்றதா? நிச்சயமாகவும் இல்லை. அத்தகை நற்கூலி உண்மையில் அனைவருடைய எதிர்பாரலுக்கு அப்பார்பட்டதாகயிருக்கும். உண்மையில் அது, விவரித்துக் கொள்ள ஆகாத தரத்திற்குட்பட்ட நற்கூலியாகும். ரமலான்**

**மாதத்தில் நாம் அனைவரும் வாழ்ந்திருந்தோம். அதற்கு துல்லியமான ஒரு நற்கூலியல்ல அல்லாஹ் நம்மீது பொழிந்துக் கொள்வது. மாறாக இவ்வுலகைவிடவும் இதில் உள்ளடங்குவதை விடவும் மேலான நற்கூலியாகும் கிடைப்பது.**

பூமியில் நமக்கு நிலம் வாங்கிட முடிகின்றது. நம்மை சார்ந்த சிலர் பெரிய மாளிகை வாங்குகின்றனர். சிலர் வாடகைக்கு எடுத்துக் கொள்கின்றனர். மற்று சிலர் ஸ்கொயர் (Square) கணக்கிற்கு வாங்கிற்றனர். நிலம் வாங்க எண்ணும் பகுதியின் ரீதிக்கு ஏற்றவாறாகும் அதை வாங்கிக் கொள்வது. இந்த வியாபாரத்தைப் பற்றி மிக நல்ல நிலையில் உணர்ந்திருப்போர்களுக்கு (நிலம் வாங்கிக் கொள்ளவும் வியாபாரம் செய்துக் கொள்ளவும் செய்வோர்களுக்கு) நிலத்தின் சரியான விலையைக் குறித்து அறியமுடிகின்றது. பல்வேறு இடங்களில் என்ன விலை நிலத்திற்குண்டு என்பதை அவர்களுக்கு தெரிந்திருக்கும். ஒரு குறிப்பான பகுதியில் நிலம் வாங்குவதற்கு பணம் கடன் பெற்றுக்கொள்ள ஒருவர் தயாராகிவிடலாம். அந்நிலத்தில் ஒரு நல்ல வீட்டை அவர் கட்டிக் கொள்ளவும் செய்வார். அதற்காக அவர் பணம் கடன் பெற்றுக் கொள்கின்றார். பொருளாதாரத்துறை அலுவலகங்களிலிருந்து லோண் பெற்றுக்கொள்ளவும் அவர்கள் தயங்கமாட்டார்கள். சிலவேளை அது 10 வருடம் நீண்டு நிற்கும் வட்டி ஒப்பந்தத்தின் மீதாகும். அது வாயிலாக அவர்கள் அக்கடனுக்கு அடிமையாகமாறுகின்றனர். முதலுடன் சேர்த்து அவர்கள் வட்டியும் செலுத்துகின்றனர். இச்செயல் அவருக்கு இரண்டு மூன்று மடங்கு மனவேதனையை அளித்துக் கொள்கின்றது. அதன் மூலம் அவரது ஆரோக்கியம் மோசமடைகின்றது. இக்காலஅளவில் எந்தவித மனநிம்மதியும் அவருக்கு இருப்பதில்லை. அவர் தூக்கமும் நிம்மதியும் இழந்தவராக மாறுகின்றார். அவர் மிகப்பெரிய மன கொந்தளிப்பில் சென்றடைகின்றார். இதற்கெல்லாம் காரணம் ஒருமுறை அவர் தவிர்த்துக் கொண்ட, அந்த தற்காலிக விஷயங்களை அடைவதற்கான அவரது விருப்பமேயாகும். நிச்சயமாகவும் மரணம் உங்களை அழைத்துக் கொள்ளும் பொழுது நீங்கள் உங்களின் கடன்களை திரும்ப செலுத்திக் கொள்வதில் வெற்றியடையாமலிருந்தால் உங்கள் மரணத்திற்கு பின் அதை அனைத்தையும் அவர்கள் திரும்ப பெற்றுக் கொள்வார்கள். (அது விற்பனை வழியாகவோ அல்லது லேலம் வழியாகவோ ஆகலாம்) நீங்கள் வாழ்ந்திருக்கும் வேளையில் இவ்வாறு நிகழும் பொழுது, அவர்கள் கவலையடைகின்றார்கள். மட்டுமின்றி எதிர்காலத்தைக் குறித்தும் எவ்வித எதிர்பாரல்களும் இல்லாதவராக பரிணமிக்கின்றீர்கள்.

ஆனால் இங்கு நீங்கள் பெற்றுக் கொண்ட ஆன்மீக புதையல் என்பது அதாவது இறை விருப்பத்திற்காக அனைத்தையும் சமர்பித்துக் கொள்ளவும் ரமலானுக்கு பிறகும் நற்செயல்களில் மூழ்கியிருந்துக் கொள்ளவும் செய்தால் உங்களுக்கு உங்களின் இறைவனையே, அதற்கு நற்கூலியாக கிடைத்துவிடும். அவன் தான் உங்களை படைத்தவன். அவனே தான் இந்த பிரபஞ்சத்தை

படைத்தவன். இந்த பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்தையும் படைத்தவனும் அவனே தான். அனைத்தும் அவனுக்குரியதாகும். அவனை அடைத்து கொள்தல் என்பது அவனது வார்த்தைகளை பின்பற்றிக் கொள்வதன் வாயிலாகவேயாகும். அவன் செயல்பட கூறியவாறு செயல்பட்டுக் கொள்ளுங்கள். அவன் தடைவிதித்ததை செய்யாமலிருங்கள். அவனது செய்தியை அங்கீகரித்துக் கொள்ளுங்கள். அவன் தோற்றுவித்த அவனது தூதர் வாயிலாக வழங்கிய செய்தியை! ஒரு லோண் (Loan) ஆனாலும் சரி அதன் வட்டியானாலும் சரி எவ்வித கடனும் உங்களுக்கு இல்லாமலிருந்தால், உங்களை கவலைக்கு ஆளாக்கும் எவ்வித கடனும் உங்களுக்கு இல்லாமலிருந்தால் அதற்கான நற்கூலி இவ்வுலகிலும் அதை போன்றே மறுவுலகிலும் கிடைத்துவிடும். இறை கட்டளைகளுக்கு கட்டுப்பட்டுக் கொள்வது மூலமாகவே உங்களுக்கு அவ்வாறு செய்ய முடிந்தது. அது வாயிலாக உங்களுக்கு அமைதியும் கிடைத்துவிடும். மன நிம்மதியும் கிடைத்துவிடும் நல்லமுறையில் தூங்கிக் கொள்ளவும் முடிந்துவிடும். இந்த தற்காலிகமான உலகம் உங்களை தவிர்த்துக் கொள்ளும் பொழுது நீங்கள் மகிழ்ச்சியுடன் இங்கிருந்து செல்வீர்கள். காரணம் உங்கள் மீது எவ்வித ஆட்சேபனங்களும் இல்லை. உங்களின் படைத்தவன் உங்களிடம் கூறியவாறு நீங்கள் செயல்பட்டீர்கள். ஆகவே அவனை தரிசித்துக் கொள்ள நீங்கள் மகிழ்ச்சியுடன் செல்வீர்கள்! நிச்சயமாகவும் நீங்கள் மிகப்பெரிய நற்பலனைப் பெற்று அருளுக்குரியவர்களாவீர்கள். அத்தகை நற்கூலிக்காக அவன் உங்களை தேர்ந்தெடுத்திருக்கின்றான். அதனால் நீங்கள் மகிழ்ச்சியுடன் இவ்வுலகில் நின்று செல்வீர்கள். காரணம் நீங்கள் நன்மையின் விதையை விதைத்திருக்கின்றீர்கள். அறுவடைகாலம் சுவைமிக்க பழங்கள் ஏராளமாக பெற்றுக் கொள்ளலாம். நிரந்தரமான மறுவுலகமனைக்குள் அதை நீங்கள் பெற்றுவிடுவீர்கள். நீங்கள் பூமியில் வாழ்ந்திருந்த காலம் வரையில் நீங்கள் உங்களை படைத்தவனை நேசித்தீர்கள். உங்களின் இறைவன் திருப்தியடையும் வகையிலான செயல்களை வாழ்க்கை முழுவதும் புரிந்தீர்கள்.

அதனால் நாம் சாத்தானின் பொறியில் அகப்படாமலிருக்க வேண்டும். ரமலான் மாதத்தில் மேற்கொண்ட நற்செயல்களுக்குப்பிறகு! அந்த மாதத்தில் சுன்னத்தான செயல்களுக்கு "பர்ளு"க்கு கிடைக்கும் நற்கூலிகளையாகும் நாம் பெற்றுக் கொண்டது. இந்த நற்கூலி மிக பெரிதாகும். அது நம் எதிர்பாரலுக்கும் அப்பார்பட்டதாகும். அது நமக்கு அளித்துக் கொள்வதும் அல்லாஹ்வே தான். நம் அனைத்து தவறுகளையும் அவன் மன்னிக்கின்றான். ஆன்மீக நீராடலுக்காக அம்மாதத்தில் ஒவ்வொரு நிமிடத்தையும் பயன்படுத்திக் கொள்வதற்கான பாக்கியத்தை அவன் நமக்கு வழங்கியிருந்தான். நம் உடலையும் ஆன்மாவையும் சீரமைத்துக் கொள்வதற்கான அருட்கள் அவன் நமக்கு வழங்கியிருந்தான். நம் உடலுக்கு நல்ல முறையிலான நவீகரித்தலாகும் அது வாயிலாக அவன் அளித்திருப்பது. நிச்சயமாகவும் அவை இரண்டையும் வேறுபடுத்த ஆகாது. அதாவது ஆன்மீக அளவிலான சீரமைப்பும் பௌதீக (உடல்) அளவிலான சீரமைப்பும். தேவையற்ற அனைத்தையும் வெளியேற்றிக் கொண்டு ஆன்மா

சீரடைகின்றது. அது வாயிலாக ஒரு புது வாழ்க்கை உருவாகின்றது. பெற்றெடுத்த ஒரு குழந்தையைப் போன்று அவர் தூய்மையடைகின்றார். பாவங்களிலிருந்து மீட்சியைப்பெற்ற அவரது உடலும் சுத்தமாகின்றது.

## Ponder Over This

## இதைக்குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள்

இவ்வுலகில் நீங்கள் ஆசைப்படுவதை அடைந்துவிட என்ன வேண்டுமென்றாலும் செய்வீர்கள். பணம் கடன் பெற்று அதற்கு வட்டி செலுத்திக் கொண்டானாலும் ஆசைப்படுவதை அடைந்துவிடுவீர்கள். ஆனால் நிரந்தரமான நன்மைக்கானதை நீங்கள் புறக்கணித்துக் கொள்ளவும் செய்கின்றீர்கள். இறைவனிடமிருந்துள்ள நற்கூலியெனும் மாபெரும் வாக்குறுதியை தூக்கி வீசிக் கொண்டு பௌதீக விஷயங்களை அடைவதற்கு எவ்வாறு உற்சாகத்துடன் உங்களுக்கு செயல்பட முடிகின்றது? இது தங்கத்தையும் வைரத்தையும் தூக்கி வீசிக் கொண்டு பாறைக்கல்களின் பின்னால் செல்வதைப் போன்றாகும்.

இதை பகுத்தறிவு பெற்ற ஒரு நபரின் செயலாக எண்ணயியலாது. அவர் தூக்கி வீசியதன் விலை என்னவென்று உணராதவராவார். ஆகவே எவர் ஒருவர் இவ்வுலகின் மீது ஆசைப்பட்டுக் கொள்ளவும் மறுவுலகை புறக்கணித்துக் கொள்ளவும் செய்கின்றாரோ அவர் நிச்சயமாகவும் மடையனாவார். அவர் அல்லாஹ்வின் வாக்குறுதிகளில் நம்பிக்கையற்றவர் ஆவார். அவருக்கு போதுமான திட நம்பிக்கையில்லை. ஒவ்வொரு நல்ல செயல்களுக்கு அல்லாஹ் வாக்குறுதியளித்திருக்கும் நற்கூலியைப் பற்றி அவருக்கு ஊக்கமில்லை. **மதத்தின் உண்மையான தோழர்கள் அதாவது நேர்மையான நம்பிக்கையாளர்கள் அவர்களின் “இபாதத்திற்கு மாறாக தற்காலிக நற்கூலிக்காக பௌதீக பொருட்களின் பின்னால் செல்ல ஆயத்தமாகுவதில்லை. அவர்கள் தேடிக் கொள்வது நிரந்தரமானவையே ஆகும்.**

அவர்களின் இலட்சியம் என்பது நற்கூலியாக அல்லாஹ்வை அடைய வேண்டும் என்பதாகும். நிச்சமாகவும் நம்பிக்கையாளர்கள் மத்தியிலும் அல்லாஹ்வின் முன்னாலும் அவர்களுக்கு சிறப்பான பதவிகள் உண்டு. அல்லாஹ் அவனது மற்று நம்பிக்கையாளராகிய அடியார்களை நேசிக்கவில்லை என இதற்கு அர்த்தமில்லை. அவர்களின் நம்பிக்கையின் நிலைக்கு ஏற்றவாறு, அவர்களின் நல் நோக்கத்திற்கு உகுந்தவாறு அல்லாஹ் அவர்களை நேசிக்கவும் அவர்களுக்கு நற்கூலி வழங்கவும் செய்கின்றான். அல்லாஹ் தேர்ந்தெடுத்த தொண்டர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் பதவியும் மதிப்பும் அல்லாஹ்வின் நோக்கத்தில் மிக பெரிதாகும். காரணம் அல்லாஹ் அவர்களை படைத்திருப்பது ஒரு பிரத்தேகமான வேலையை பூமியில் செய்துக் கொள்வதற்கேயாகும். நிச்சயமாகவும் அவர்களின் பதவி பூமியில் மற்று

நல்லொழுக்கமுடையவராகிய நம்பிக்கையாளருக்கும் மேலேயாகும். அதனால் நம்பிக்கையாளராகிய நபர்கள் விழிப்புணர்வுள்ளவராகவும், தன்னம்பிக்கையுள்ளவராகவும், நேர்மையான நம்பிக்கையாளராகவும், திட நம்பிக்கையாளராகவும் இருப்பார். அதாவது அவர்களுக்கு அல்லாஹ் வழங்கும் நற்கூலி என்பது இந்த தற்காலிகமான உலகைவிடவும் அதிலிருப்பதை விடவும் மிக சிறப்பு பெற்றதாகயிருக்கும் என்று அவர்கள் திட நம்பிக்கை கொள்வோர்களாகயிருப்பார்கள். அறிவற்றவர்களைப் பொறுத்தவரையில் இது ஒரு பொய் என எண்ணி விடலாம். ஆனால் நேர்மையான நம்பிக்கையாளரைப் பொறுத்தவரையில் இதை மறுத்துக் கொள்ள முடியாத ஒரு உண்மையாகயிருக்கும். அவர்கள் சுயம் அல்லாஹ்வுக்காக அவர்களை அர்ப்பிக்கின்றனர். அவர்கள் அல்லாஹ் வாயிலாக மன நிம்மதியை அடைகின்றனர். அவர்களின் அனைத்து விஷயங்களையும் அல்லாஹ்விடமே விட்டுவிடுகின்றனர்.

சாத்தானின் தாக்குதலிலிருந்து நம் அன்புக்குரிய தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தை அல்லாஹ் பாதுகாப்பானாக! நம்மிடமிருந்து ஆனாலும் சரி வெளியேயிருந்து ஆனாலும் சரி! அல்லாஹ்வின் அருட்களால் அல்லாஹ் அவனது கலீ.்.பாவை உங்களிடம் அனுப்பி வைத்துள்ளான். அவனது வழிகாட்டுதல் வழியும் இறை கட்டளைகளை பின்பற்றிக் கொள்தல் மூலமும் உங்களுக்கு பயன் கிடைப்பதற்காக! இஸ்லாமின் உண்மையான போதனைகளின் பால் அல்லாஹ் உங்களின் இதயங்களை திறப்பானாக! அது வழி நீங்கள் உண்மையான முஸ்லீம்களாக மாறிடட்டும்! நாவைக்கொண்டு மட்டுமான முஸ்லீம்களாக அல்ல! மாறாக செயல்வடிவிலான முஸ்லீம்களாக! களங்கமற்ற இதயம் கொண்ட முஸ்லீம்களாக! இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Issued by:**

Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 9789180817
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com



**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817